ஆகவே படகர் சமுதாயத்தை, அவர்களின் எதிர்கால சந்ததியினர் வாழ்வு சிறக்கவும், அந்த சமுதாயத்தை தனிப்பெரும் தன்மையோடு வாழ்வாங்கு வாழவைக்கும் முறையிலே, மலையிலேயே பிறந்து மலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களை மலை ஜாதிப்பட்டியலில் விரைவாகச் சேர்ப்பதற்கு தமிழக அரசு மீண்டும் ஒரு முறை மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மலை வாழ் மக்களிடம் கொண்டிருக்கும் அன்பையும் பாசத்தையும் நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். ஊட்டியில் ஒரு நிகழ்ச்சியில் அந்த மக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் அவர்கள், அவர்கள் நடத்திய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அந்த மக்களைப் பெருமைப் படுத்தினார்கள். அந்த மக்களை மகிழ்ச்சி அடைய வைத்தார்கள். அப்பேர்ப்பட்ட முதலமைச்சருடைய ஆட்சிக் காலத்தில் இந்தக் கோரிக்கை மத்திய அரசுக்கு மீண்டும் வலியுறுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 479, திருமதி கவிநிலவு தர்மராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 480, டாக்டர் ஜெ. பரந்தாமன். மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

480—

பேரணாம்பட்டு தொகுதி, மாதனூர் பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்குக் கட்டிடம் கட்டுதல்

** 26203—டாக்டர் ஜெ. பரந்தாமன்:*

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதி, மாதனூர் பிற்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி மாதனூரில் தனியார் கட்டிடத்தில் இயங்கும் பிற்படுத்தப்பட்டோர் நல

1994 மே 2]

மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் ஆய்வில் இல்லை.

முற்பகல் 11-05

டாக்டர் ஜெ. பரந்தாமன்: பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதி மாதனூர் ஒன்றியத்தில் ஏழை தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் நிறைய பேர்கள் வசிக்கிறார்கள். எனவே அரசு பரிசீலனை செய்து கட்டித்தர ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் கட்டப்படுகின்ற விடுதிகள் எல்லாம் மாணவியர் விடுதிகளாக இருக்க வேண்டும் என்கின்ற நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அறிவுரையின்படி தற்போது மாணவியர் விடுதிகள் மட்டும்தான் கட்டித்தர முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை வெறும் ஓட்டுக்களுக்காக மட்டுமே சம்பந்தி என்று நடிக்கின்ற பல தலைவர்கள் மலிந்துள்ள இந்த நாட்டில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியலில் ** போன்றவர்கள் பதவி தரக்கூடாது என்று தடுத்த காலத்திலும் அரசியலிலும் தொழில் துறையிலும் முன்னேற, உயர வாய்ப்பு அளித்துள்ள டாக்டர் புரட்சித் தெய்வம் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நீங்கள் சொன்ன பெயர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: சென்னை கோயம்பேட்டில் டாக்டர் அம்பேத்கார் சிலையைத் திறந்து வைத்ததற்கு நன்றியை காணிக்கையாகச் செலுத்தி, தாழ்த்தப்பட்ட மக்களை இனிமேல் ஹரிஜன் மக்கள் என்று சொல்வதைவிட ஜேஜன், ஜேஜன் என்று சொல்வதை பிறவிப் பயன் என்று முடிவு எடுத்துவிட்டோம் என்று சொல்லி தற்போது மாணவியர்க்கு மட்டுமே விடுதிகள் கட்டித்தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 5, 6 மாணவியர் விடுதிகள் கட்டித்தரும்போது ஓரிரு மாணவர் விடுதிகளாவது கட்டித்தர முடியுமா என்று சொல்லி அப்படிக் கட்டித்தர வாய்ப்பு இருக்கும்போது மாதனூர் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்காவது கட்டிடம் கட்டித்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: தலைவர் அவர்களே, மாணவியர் விடுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்துவிட்டு பிறகுதான் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மாணவியர்களுக்கு விடுதிகள் கட்டி முடித்த பிறகு மாணவர்களுக்கான விடுதிகள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்ட வினாக்கள் தற்போது எடுத்துக்கொள்ளப் படுகின்றன. வினா எண் *469*, திருமதி ரமணி நல்லதம்பி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

469—

ராதாபுரம் தொகுதியில், குளங்களில் செங்கல், ஓடு தயாரிப்புக்காக மண் எடுப்பதை முறைப்படுத்துதல்

*** 13798**—திருமதி ரமணி நல்லதம்பி:

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில், ராதாபுரம் தொகுதியில் செங்கல் தயாரிப்பாளர்களும், ஓடு தயாரிப்பாளர்களும் குளங்களில் மண் எடுப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை முறைப்படுத்தி அரசு வருவாய் பெற நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ : திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் அமைந்துள்ள 3 குளங்களில் மண் எடுத்துக் கொள்ளும் மாதாந்திர தற்காலிக அனுமதி ஒருசில செங்கல் மற்றும் ஓட்டு தயாரிப்பாளர்களுக்கு அந்த மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்டு மண் எடுக்கப்படுகிறது. செங்கல் மற்றும் மண் பானைகள், ஓடுகள் தயாரிப்பதற்காக இந்தக் குளங்களில் எடுக்கப்படும் களி மண்ணுக்கு 10 கன அடிக்கு ரூ. 2.25 வீதம் சிறு கனிம பிரிவின் கீழ் சீனியரேஜ் கட்டணம் விதிக்கப்பட்டு அரசுக்கு வருவாய் கிடைக்கிறது என்பதையும் கடந்த 3 ஆண்டுகளில் ரூ. 59,300 சீனியரேஜ் கட்டணம் வசூலிக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.